**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 44/2020**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 28.04.2026 | | |
| பெயர்: | பார்த்தசாரதி (PW1– Cross ) | தகப்பனார் பெயர்: | கோவிந்தசாமி |
| கிராமம்: | புதுப்பட்டினம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 60/2026 |

**<u>1, 2 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 28.04.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.03)**

நான் இந்த வழக்கை 2020ம் வருடம் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்கு சொத்து கோவிந்தசாமி மகன் இளவன் பெயரில் உள்ளதாக தான் வா.சா.ஆ.4 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், ஆனால் பட்டா பெயர் மாற்றம் செய்துள்ளேன். வழக்கிற்காக பொய்யான ஆவணங்களை கொண்டு பட்டா மாறுதல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பெயரிலும், கோமளவள்ளி பெயரிலும் பட்டா மாற்றம் செய்ய வேண்டும் என உத்தரவு பெறப்பட்டுவிட்டு, ஆனால் எனது பெயரில் மட்டும் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது செல்லாது (வா.சா.ஆ–7) என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தில் எனக்கு உரிமை மூலம் இல்லை என்றாலும், வழக்கிற்காக ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நெடுஞ்சாலைத்துறை சம்பந்தமாக நான் கேட்டிருக்கிற பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மின்சார வாரிய அதிகாரிகளுக்கு

எதிராக நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை மின்சார சட்டத்தின் படி விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு ஆள்வரை வரம்பு இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்கப்பட்டிருக்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.13)**